

**16**

# பிற வகை எழுத்தாளர்கள்

## 16.1. அறிவியலுடன் நடப்பியல் புதினத்தை இணைத்தவர்: எமீல் சோலா **Emile Zola** (1840–1902)

வாழ்க்கைக்குறிப்பு :- பாரீஸில் **1840**இல் பிறந்த எமீல் சோலா ஏழு வயதுச் சிறுவனாக இருந்தபோது தம் தந்தையை இழந்தார். அப்போது குடும்பம் ஃபிரான்ஸ் நாட்டுத் தெற்குப் பகுதியில் வாழ்ந்து–கொண்டிருந்தது. கடன் மற்றும் வறுமையிலிருந்து விடுபடத் தம் தாயாருடன் பாரீஸ் வந்தார் சோலா; பட்டப்படிப்பில் இருமுறை தோல்வி அடைந்த வெறுப்பில் படிப்பை நிறுத்தினார்; வேலை தேடி அலைந்தார்; சில காலம் குமாஸ்தா பணியில் இருந்தார்; பிறகு Hachette எனும் புகழ்பெற்ற புத்தக வெளியீட்டாளர்களிடம் புத்தகப் பார்சல்களைக் கட்டி அனுப்பும் பணியில் சேர்ந்தார். நிறுவனம் இவருடைய நுண்அறிவைப் புரிந்து கொண்டது. விரைவில் அந்நிறுவனத்தின் விளம்பரத்துறையின் தலைமைப்



பதவி இவருக்குக் கிடைத்தது. அப்போது மிகவும் பிரபலமாக இருந்த எழுத்தாளர்களுடன் பழகும் வாய்ப்பும் அவர்தம் நட்பும் கிட்டின. எழுத்துலகில் பிரவேசித்தார் சோலா. இலக்கியத்திறனாய்வுக் கட்டுரைகளும், ஓவியக்கலை விமரிசனக் கட்டுரைகளும் பலவாக எழுதினார்; பத்திரிகை நிருபராகச் சில காலம் பணியாற்றினார்; Les contes à Ninan என்று ஒரு சிறுகதைத் தொகுப்பை **1864**இல் வெளியிட்டார். **1867** இல் Thérèse Raquin எனும் நாவல் இவருடைய முதல் வெற்றிப்படைப்பு. ஒருகொலைகாரத் தம்பதியினரைப் பற்றிய இது இலக்கிய வட்டாரங்களில் பரபரப்பை எற்படுத்தியது.

### 16.1.1. இயற்கையியல் புதினம் (**Naturalism**)

சோலா வாழ்ந்த காலம் உயிரியல் விஞ்ஞானத்தில் பல முன்னேற்றங்களைக் கண்டது. டார்வினுடைய கொள்கைகள், மற்றும் Dr. Lucas-னுடைய மரபியல் (Heredity) தத்துவங்கள், Claude Bernard எழுதிய மருத்துவத்துறையில் கடைப்பிடிக்கப்படவேண்டிய அறிவியல் அடிப்படைப் பரிசோதனை முறைகள் ஆகியவை சோலாவை மிகவும் கவர்ந்தன. மனோதத்துவம் என்பது உடற்கூறு செயல்பாட்டுக்கு உட்பட்டு மாறுபடக் கூடியது என்பது சோலாவின் கருத்து. ஒரு கதாபாத்திரத்தின் உடற்கூறு இயக்கம் அவன் வாழும் சூழ்நிலைக்குத் தக்கவாறும், ஐம்பொறிகளின் உணர்த்துதலுக்குத் தக்கவாறும் மாறுதலுக்குட்பட்டது. மேலும் ஒரு மனிதனின் குணமும் செயல்பாடும் பாரம்பரியத்தினால் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆகவே இவற்றில் பரிசோதனை முறையில் ஆராய்ச்சிகளை நாவல்களிலும் செய்யவேண்டும் என்பது சோலாவின் கொள்கை. இதையே அவர் Roman expérimental என்று குறிப்பிடுவார். சுருங்கச் சொன்னால், உயிரியல் ஆதாரங்களை வைத்து நடப்பியலை எடை போடுவதே இயற்கையியல் புதினம். பல்சாக் நூற்றுக்கணக்கான பாத்திரங்களின் செயல்பாட்டை தாம் கண்டவாறு எழுதினார்; சோலா ஒரே ஒரு குடும்பத்தை எடுத்துக்கொண்டு அதன் ஐந்து தலைமுறையை ஆராய்ந்து காட்டுவதே தம் படைப்பின் கருவாகக் கொண்டார்.



(Rougon-Macquart) ருகோ மக்கார் எனும் இத்தொகுப்பின் முதல் நூல் **1871** இல் வெளிவந்தது. அதற்கு இவர் தந்த தலைப்பு : ''இரண்டாவது சர்வாதிகாரியின் ஆட்சிக்காலத்தில் ஒரு குடும்பத்தின் சமூக மற்றும் இயற்கையியல் வரலாறு'' என்பதாம். இந்த மாபெருந் தொகுப்பில் **20** நாவல்களைச் சராசரி ஆண்டு ஒன்றுக்கு ஒரு நாவல் எனும் விகிதத்தில் தொடர்ச்சியாக வெளியிட்டார் சோலா. இந்த **20** நாவல்களின் தொகுப்பு **31** பாகங்களையும் **1200**க்கும் மேற்பட்ட பாத்திரங்களையும் உள்ளடக்–கியதாக அமைந்தது.

சோலா கூறுவார்: *''நமது கதாநாயகன், பதினெட்டாம் நூற்றாண்டு நூல்களில் விவரிக்கப்பட்டு 'மானுடம்' என்று கூறப்பட்ட கண்ணுக்குப் புலப்படாத ஒரு தத்துவம் அல்லன். அவன் தற்கால விஞ்ஞானம் நமக்குக் காட்டியுள்ள விதிகளின்படி பல உடல்உறுப்புகளின் ஒருங்கிணைந்த செயல்பாட்டின் விளைவு. ஒவ்வொரு நொடியும் தான் வாழும் சூழ்நிலையில் மூழ்கியிருப்பவன்... ஐம்புலன்களும் அவனுடைய மனத்தை ஆட்டுவிக்கின்றன. பார்த்தல், மோந்தறிதல், கேட்டல், ருசித்தல், தொட்டு உணர்தல் ஆகியவற்றின் செயல்பாட்டுக்குத் தக்கபடி அவனுடைய ஒவ்வொரு சிந்தனையும், அசைவும் மாறுபடும். மனிதமனம் என்று ஏதோஒன்று தன்னிச்சையாக இயங்கிக்கொண்டிருக்கிறது எனும் எண்ணம் தவறானது''.*

இவருடைய தொகுப்பில் முதல் ஆறு நாவலுக்கும் சுமாரான வரவேற்புத்தான் கிடைத்தது. ஏழாவது நாவலான (L'assmmoir **1877**) ''கள்ளுக்கடை'' மிகப்பெரிய வெற்றி கண்டது. குடிப்பழக்கம் எப்படிக் குடும்பத்தைச் சீரழிக்கிறது என்பதைக் காட்டுவது இந்நாவல்.**1880**இல் வெளிவந்த Nana அம்மைநோயினால் முகத்தழகு பாதிக்கப்பட்ட ஒரு பதினெட்டு வயதுப் பெண்ணின் கதை. அப்போதைய ஆட்சியின்கீழ்ச் சமுதாயத்தில் பெரிதும் பரவியிருந்த லஞ்சஊழல்களின் குறியீடாக அம்மை நோயை வைத்தார் ஆசிரியர். Germinal (1885) எனும் நாவல் சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தைப் பற்றியது.



முதலாளி–தொழிலாளி பிரச்சினையை ஆராய்கிறது இக்கதை. மனிதர்கள் கூட்டமாகச் சேரும்போது நிகழும் எழுச்சியையும் மெல்ல இனந்தெரியாமல் உருவாகும் தீவிரத்தன்மையையும் சித்திரிப்பதில் தன்நிகரற்றுத் திகழ்கிறார் சோலா.

இந்நூல்கள் சோலாவுக்கு மிகப் பெரிய வெற்றியைத் தந்தன. ஒரு கோடிப் பிரதிகளுக்குமேல் விற்றுத் தீர்ந்தன, இவர் புத்தகங்கள். இவருடைய கதைகள் பல்வேறு ஐரோப்பிய மொழிகளில் உடனுக்குடன் மொழியாக்கம் செய்யப்பட்டன. பலகதைகள் நாடகங்களாக மேடையேறின. (பிற்காலத்தில் திரைப்படங்களாகவும் எடுக்கப்பட்டன) செல்வம் வந்து கொட்டியது. சோலாவின் புகழ் விண்ணையெட்டியது. சமுதாயத்தில் செல்வாக்கும் ஓங்கியது, நாட்டின் மிகப் பிரபலமான ஒருவர் என இவர் பேசப்பட்டார். புகழின் மறுபக்கமாக சோலாவுக்கு நிறைய எதிர்ப்பும் கிளம்பியது. பழைய நண்பர்கள் இவரை விட்டுப்போய் இவர் கொள்கைகளைத் தாக்கினர். இவர் எழுத்து ஆபாசமென்றும், சமுதாயத்தின் சாக்கடையிலேயே திளைக்கிறது என்றும் பலர் கூறினர். சோலா சிறிதும் அயரவில்லை; அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் எதிர்கொண்டு அபாரத் தன்நம்பிக்கையுடன் விளக்கம் அளித்து மறுப்பு எழுதினர்.

### 16.1.2. **Dreyfus** வழக்கு

கேப்டனாக இருந்த Dreyfus இராணுவ இரகசியங்களை வெளியிட்டுவிட்டார் என்று தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு நாடுகடத்தப்பட்டார். வழக்கில் பல குறைபாடுகள் இருப்பதாகவும், Dreyfus-க்குப் பெருஅநீதி இழைக்கப்பட்டுவிட்டதாகவும் ஒரு கருத்து வலுப்பெற்றது. சீரிய புகழும் மிகுந்த செல்வாக்கும் உடைய சோலா இதில் தலையிட்டு மனித உரிமையைக் காக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டார். வழக்கின் விவரங்கள் அனைத்தையும் தீர ஆய்ந்து அறிந்துகொண்ட சோலா Dreyfus க்கு அநீதி இழைக்கப்பட்டுவிட்டதை உணர்ந்தார்; **1898**இல் 'நாட்டு ஜனாதிபதிக்கு ஒரு பகிரங்கக் கடிதம்'

(J'accuse நான் குற்றம் சாற்றுகிறேன்) எழுதி தவறுகளை இடித்துக் காட்டிப் பத்திரிகையில் ஒரு பெரிய தலைப்புக்கட்டுரை வெளியிட்டார். இவருடைய சொந்தப் புகழ் காரணமாக நாட்டில் ஒரு பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது, இவ்வரலாற்றுப் புகழ் பெற்ற கட்டுரை. நீதிமன்றம் வெகுண்டு இக்கட்டுரையைப் பத்திரிகையில் வெளியிட்டமைக்காகச் சோலாவுக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதித்தது. இதிலிருந்து தப்ப, இங்கிலாந்து சென்றார் சோலா. வழக்கை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் பொதுமக்களிடையே வலுப்பெற்றது. "சத்தியம் புறப்பட்டுவிட்டது, இதை எதுவும் தடுத்து நிறுத்த முடியாது" என்று எழுதினார் சோலா. **1899**இல் நிரபராதி என்ற மறுதீர்ப்பு வந்தது. நாடுதிரும்பினார் Dreyfus, சோலாவும்தான். எழுத்தாளர் எனும் புகழோடு மனித உரிமைக்குப் போராடுபவர் எனும் கீர்த்தியும் சோலாவுக்குக் சேர்ந்து கொண்டது.

இவர் **1902**இல் தம்முடைய வீட்டில் மூச்சுத்திணறி இறந்தார். அது விபத்தா அல்லது சதிவேலையா என்பது ஒருபெரிய கேள்விக்குறி. இவருடைய இறுதி ஊர்வலத்தில் சுமார் ஐம்பதாயிரம் பேர் கலந்து கொண்டனர். அப்போது வேறு இடத்தில் அடக்கம் செய்யப்பட்ட இவரது பூதவுடல், ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு பாரீஸ் பாந்தியோனுக்குக் கொண்டுவரப்பட்டு தற்போது அங்கே உறைகிறது.

### 16.1.3. இலக்கியக் கோட்பாடுகள்

'பசி': மானுடம் முரட்டுத்தனமான பல 'பசி'களுக்கு உட்பட்டது; தன்னை நசுக்கிக் கொண்டிருக்கும் உலகத்துடன் இடைவிடாது போராடிக்கொண்டிருக்கிறது. பசிக்கு உணவு தேவை; உலக வாழ்க்கைப் பசிக்கு பணம் தேவை. மனிதர் சமுதாய வாழ்க்கையில் பல்வேறு பசிக்கும் உணவாக இருக்கும் பணம், வாழ்க்கைப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது,

இயந்திரம்: மனிதஅறிவின் நுட்பத்தினால் உண்டான இயந்திரத்தை 'இயங்கிக் கொண்டிருக்கும் அறிவு' என்றே கூறலாம். மனிதன்



இயந்திரத்தைத் தனக்குப் பயன்படுத்திக் கொள்கிறான். அதேபோல் இயந்திரமும் மனிதனைப் பயன்படுத்திக்கொள்கிறது; தன்னுடைய செயல்பாட்டுக்கு ஏற்ப அவனுடைய வாழ்க்கைக் கதியை நிர்ணயிக்கிறது. சில சமயம் இயந்திரம் மனிதனைக் கொன்றுவிடுகிறது. மானுடம் இவ்வுலகைத் தன்வசப்படுத்திக்கொள்ள விரும்புகிறது. ஆனால் உலகமோ அதன் பிடிக்கு அகப்படாமல் நழுவிக்கொண்டே இருக்கிறது. இப்போராட்டத்தின் உருவகம்தான் மனிதனுக்கும் இயந்திரத்திற்கும் இடையே நிகழும் போராட்டம்.

காலம்: சோலாவின் நாவல்களில் கதை ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் நிகழ்வதாக அமைந்திருக்கும். இதன் வழியே பாத்திரங்கள் எவ்வாறு வளர்கின்றன என்பதைச் சித்திரிப்பார் ஆசிரியர்.

சோலாவின் எழுத்துநடையில் நீண்ட வருணனைகளுக்கு இடமில்லை – கதாபாத்திரங்கள் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும். இவரது கற்பனை வளம் அசாதாரணமானது. மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்து பட்டப்படிப்பும் இல்லாதபோதும், தன்னுடைய தனிவழிச் சிந்தனையாலும், எழுத்தாற்றலாலும் மட்டுமே மிகஉயர்ந்த சமுதாய நிலையை எட்டிச் செல்வத்துடனும், புகழுடனும், கௌரவத்துடனும் வாழ்ந்து மறைந்தவர் சோலா.

## 16.2. அல்ஃபோன்ஸ் தொதே **Alphonse Daudet** (1840–1897)

நொடித்துப்போன ஒரு பட்டு வியாபாரியின் குடும்பத்தில் பிறந்தவர் தொதே. இவர் ஒரு சீமானுக்கு செயலராகப் பணியாற்றினார்; ஓய்வுநேரம் கிடைத்த போதெல்லாம் எழுதத் தொடங்கினார்; இலக்கிய வட்டக் கூட்டங்களுக்குச் செல்லும் வழக்கத்தினை ஏற்படுத்திக்கொண்டார். சமுதாயத்தில் தான் கண்டவற்றை எளிய நடையில் எழுதினார் தொதே. இவருடைய கதைகளில் ஏழைக்குழந்தைகள், வாழ்வில் அதிர்ஷ்ட மற்றவர்கள், மாஜி மன்னர் குடும்பத்தினர், அரசியல்வாதிகள், மதத் தீவிரவாதிகள் எனப் பலதரப்பட்டவர்களைக் காணமுடிகிறது. அல்ஃபோன்ஸ்



தொதேயின் முக்கியநூல்கள் வருமாறு: Le Petit Chose (ஷோஸ் எனும் சிறுவன்) – இதில் ஆசிரியருடைய இளமைப் பருவ நினைவுகள் இடம் பெற்றுள்ளன.) Lettres de Mon Moulin (என் கிராமத்து அரைவை ஆலையிலிருந்து எழுதிய கடிதங்கள்) – இந்நூலில் கிராமத்து ஒளிமிகு இயற்கைக்காட்சி வருணனைகள் காணக் கிடக்கின்றன. கவிதை கொஞ்சும் உரைநடையழகு படிப்பதற்கு விருந்து. இந்நூலில் சில மிருகங்கள் சம்பந்தப்பட்ட கதைகளும் உண்டு. செகே என்பவரின் வெள்ளாடு கதை பிரசித்தம். இவை பதினேழாம் நூற்றாண்டு LaFontaine-ஐ நம் நினைவுக்குக் கொண்டுவரும்: Les Contes du lundi (திங்கட் கிழமைக் கதைகள்) ஃபிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் நடந்த போர், மற்றும் சில உள்நாட்டு அரசியல் நிகழ்வுகளைப் பற்றிய காட்சிகள் இதில் உண்டு; Tartarin de Tarascon சிரிக்கவைக்கும் எளிய கதைகள்.

அல்ஃபோன்ஸ் தொதே மனிதர்களைப்பற்றி உயர்வான எண்ணம் கொண்டிருந்தார் எனக் கூற முடியாது. ஆனால் இவர் ஒரு துன்பியல் கொள்கையர் அல்லர். இவருக்கு மனிதர்களைப் பிடிக்கும். அவர்கள்பால் இவர் ஓர் அன்பு, பரிவு, இரக்கம் உடையவர். மோபசானின் 'எல்லாம் துன்பமயம்' எனும் கொள்கையிலிருந்தும், சோலாவின் அறிவியல் அடிப்படைக் கதைகளிலிருந்தும் விலகியே இருந்தார் தொதே.

"என்னால் இயன்றவரை மக்களுக்கு இன்ப நினைவுகளை விற்பனை செய்யும் வியாபாரியாகவே இருக்க விரும்புகிறேன்" என்று கூறுவார் தொதே. அழுமூஞ்சிக் கவிதை, அயோக்கியர்கள் பற்றிய வர்ணனைக் கதைகள் ஆகியவற்றிலிருந்து விடுபட்டுச் சற்றே மனம் விட்டுச் சிரித்துமகிழ்ந்திட அரிய வாய்ப்புகள் அளிப்பவை, இவருடைய இயல்பான, எளிய நடையில், கவிதையழகு கொஞ்சும் கதைகள்.

## 16.3. அறிவியல் கதைக்கு ஒரு முன்னோடி: ழுயில் வேர்ன் **(Jules Verne)** 1828–1905

பாரீசுக்கு சட்டம் பயிலவந்த ழுயில் வேர்னுக்கு நாடகம் எழுது வதில் அதிக நாட்டம் ஏற்பட்டது. அலெக்சாந்த்ர் துய்மாவுடன் இவருக்கு



நட்பு ஏற்பட்டது. சிறிய இசை நாடகங்கள் பல எழுதினார். அவற்றுள் வெற்றி பெற்று **40** முறை மேடையேறியவையும் உண்டு. ழுயில்வேர்ன் பாரீஸ் தேசிய நூலகத்துக்கு வந்து அறிவியல் கண்டுபிடிப்புகளைப்பற்றி நிறையப் படித்துத் தெரிந்து கொள்வார். தம் முப்பத்தைந்தாவது வயதில் **(1863)** "ஆகாயத்தில் மிதக்கும் பலூனில் ஐந்து வாரங்கள்" எனும் ஓர் அறிவியல் ஆதாரக் கற்பனை நூலை எழுதினார். பல வெளியீட்டாளர்கள் அதை நிராகரித்தனர். ஆனால் Hetzel என்பவர் அதன் அருமையைப் புரிந்துகொண்டு உடனே முழுஆர்வத்துடன் ஓர் ஒப்பந்தமும் செய்து கொண்டார்: ஆண்டுக்கு இரண்டு நூல்கள் வீதம் **20** ஆண்டுகளுக்கு ஒப்பந்தம்! ஒரு நூலுக்குச் சன்மானம் **10,000** பிராங். நூல் வெளி வந்தவுடன் பிரம்மாண்டமான வெற்றிகண்டது; ஐரோப்பிய மொழிகள் அனைத்திலும் உடனுக்குடன் மொழி பெயர்க்கப்பட்டது; வாரப் பத்திரிகைகளில் தொடராக வெளியிடப்பட்டது; அமெரிக்காவிலும் மிகப்பெரிய வரவேற்பைக் கண்டது. "**80** நாள்களில் உலகைச் சுற்றி ஒரு பயணம்" எனும் நூல் **1873** இல் வரலாறு காணாத வெற்றிகண்டது. கொழித்துக் கொட்டிய செல்வத்தில் ழுயில் வேர்ன் தமக்கென ஒரு சிறுகப்பல் வாங்கிக்கொண்டு மனைவியுடன் உல்லாசக் கடற்பயணம் கூடச் செய்தார். நாற்பது ஆண்டுகள் உழைப்பின் பயனாக **80**க்கும் அதிகமான "அசாதாரணக் கற்பனைப் பயணங்கள்" (Voyages extra ordinaires) எனும் தலைப்பில் வந்த நூல்களில் மிகவும் பிரபலமானவை வருமாறு :

- Voyage au centre de la terre 1864 - (பூமியின் மையம் நோக்கி ஒரு பயணம்)
- Voyage de la Terre à la lune 1865 - (பூமியிலிருந்து சந்திரனுக்கு ஒரு விண்வெளிப்பயணம்)
- Vingt - milles lieues sous les mers 1869 - (ஆழ்கடலில் இருபதாயிரம் மைல்கள் பயணம்)
- Le Tour Monde en quatre - Vingts jours - (பூமியைச்சுற்றி எண்பது நாள்கள் பயணம்)

- L' Ile Mystérieuse 1874 - (மர்மத்தீவு)
- Michel Strogoff 1885

தம்முடைய ஆரம்பகால நூல்களில் அறிவியல் சாதனைகளின் மாட்சியை இவர் மனமாரப் புகழ்ந்துள்ளார்; ஆனால் பிற்கால நூல்களில் அறிவியலைத் தீய நோக்கங்களுக்குப் பயன்படுத்தினால் அது மனித இனத்தையே அழித்துவிடும் என்றும் எச்சரிக்கை விடுக்கிறார். ஆங்கில இலக்கியத்தில் விஞ்ஞான அடிப்படைக் கதைகளை எழுதியவர் H.G. Wells. இவர் பிறந்தது 1866 இல் அதாவது ழுயில் வேர்னுடைய முதல் நூல் வெளிவந்ததற்கு ஈராண்டாண்டுகளுக்குப் பிறகு. Wells தம் இளமைப் பருவத்தில் ழுயில் வேர்னுடைய நூல்களின் மொழியாக்கத்தைப் படித்திருக்கும் வாய்ப்புண்டு. இவருடைய நூல்கள் (Time Machine) 1885 மற்றும் (First Men in the Moon 1901) ழுயில் வேர்னுடைய நூல்களுக்குப் பிற்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

மிகப் பெரிய விந்தை என்ன வென்றால் இவர் கற்பனையில் கண்டு வருணித்தவை அப்படியே விஞ்ஞான உண்மைகளாகத் தற்காலத்தில் மாறிடக் காண்கிறோம். எத்தகைய உள்ளுணர்வு இவருக்கு இத்தகைய தூரதிருஷ்டியை அளித்தது என்று எண்ணி வியக்காமல் இருக்க முடியாது.

இவருடைய வருணனைகள் விரிவாகவும், காட்சிகளைப் படம் பிடித்தது போல் காட்டும் இயல்புடையனவாகவும் இருக்கும். இவருடைய கற்பனைக் காட்சிகள் 'மீநடப்பியல், கவிஞர்களை (Surréalists)க் கவர்ந்தன.

இவருடைய நூல்கள் பல திரைப்படமாக வெளிவந்துள்ளன. ஃபிரஞ்சு இலக்கியவரலாற்றில் அனைத்து ஃபிரஞ்சு எழுத்தாளர்களிலும் இவருடை நூல்களே அதிகமாக மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளவை என்பது குறிப்பிடத்தக்கது. ஃபிரஞ்சு வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டை "ழுயில் வேர்னுடைய நூற்றாண்டு" என்றும் பலதிறனாய்வாளர்கள் குறிப்பிடுவர்.



### 16.4. நூற்றாண்டின் பிற்பகுதியில் நாடகம்: LABICHE

பத்தொன்பதாம் நூற்றாண்டு முற்பகுதியில் புனைவியல் நாடகம் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தது எனப் பார்தோம். விக்தோர் உய்கோ, அலெக்சாந்தர் துய்மா, முய்சே ஆகியோருடைய நாடகங்கள் புதுமையாக இருந்தாலும், அவலச் சுவையையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஆனால் நூற்றாண்டின் பிற்பகுதியல் இவற்றுக்கு வரவேற்பு குறைந்து போயிற்று.

அலெக்சாந்தர் துய்மாவின் மைந்தர் பல நாடகங்கள் எழுதினார். இவற்றில் சமுதாயப் பிரச்சினைகள் எடுத்தாளப்பட்டன. ஒரு நடிகையின் வாழ்வைச் சித்திரிக்கும் La Dame aux Camélias பிரசித்தமானது. Henry Becque என்பவர் நாடகங்களில், செயற்கை நாடக உத்திகள், திடீர்த் திருப்பங்கள், எதிர்பாராதவை என எதுவும் இல்லாமல், சமுதாயப்பிரச்சினை நேரடியாக எடுத்தாளப்படும். வெட்கங்கெட்ட சந்தர்ப்பவாதிகளைத் தோலுரித்துக் காட்டும் "காக்கைகள்" Corbeaux) எனும் நாடகம் மிகவும் பிரசித்தமானது. மக்களின் அபாரமான வரவேற்பு நகைச் சுவை நாடகங்களுக்குக் கிடைத்தன. Eugène Scribe என்பவர் 350 நாடகங்களுக்கு மேல் எழுதி மக்களைச் சிரிக்கவைக்கும் பணியில் வெற்றி கண்டார். இந்நூற்றாண்டின் மிகப் பிரபலமான நகைச்சுவை நாடக எழுத்தாளர் Eugène Labiche என்பவர் (1815–1888). ஒரு தொழிலதிபரின் மகனான இவர், சட்டப்படிப்பைவிட்டு, நாடகத்துறைக்கு வந்தார். 100க்கும் மேற்பட்ட வெற்றி நாடகங்களை அளித்தவர் லபீஷ். சமுதாயப் பழக்கங்களைக் கிண்டல் செய்யும் இவர்தம் நகைச்சுவை நாடகங்கள் வெடிச் சிரிப்பை வரவழைக்கும் தன்மையுடையவை. எதிர்பாராத திருப்பங்கள், ஒருவரை வேறு ஒருவர் என நினைத்துக் கொண்டிருக்கும் ஆள்மாறாட்ட உத்தி, வினோதமான சூழ்நிலைகளை உண்டாக்கிப் பாத்திரங்களை இக்கட்டான நிலையில் சிக்கவைத்து அவை தவிப்பதை வருணிப்பது – ஆகியவை இவருக்குக் கைவந்த கலை. பாத்திரங்களின் குணக்குறைகள் ஆழமானவை அல்ல. என்றாலும்,



நகைப்புக்குரியவை: உதாரணமாக, அசட்டுப் பிடிவாதம், தவறான பழக்கத்துக்கு அடிமையாகிக் கொண்டு அதனினின்று விடுபட மறுத்தல், காது கேளாமை, கற்பனை நோயாளிகள் முதலியன. நாடகங்களை எழுதுவதற்கு இவர் சில உதவியாளர்களையும் அமர்த்திக்கொண்டார். இவருடைய நாடகங்களில், நடுநடுவே சிறிய பாடல்கள் வரும்; இவை நகைச்சுவைக்கு மெருகுகூட்டும். மேடையில் காண்பதற்கு மட்டுமன்றிப் படிப்பதற்கும் மிகவும் இனிமையாக இருப்பவை இவருடைய நாடகங்கள். அவற்றுள் மிகப் பிரபலமானசில கிழே தரப்பட்டுள்ளன:

Le Chapeau de Paille d' Italie இத்தாலி நாட்டு ஓலைத் தொப்பி

L' affaire de la rue de Lourcine : லூர்சின் தெரு மர்மம்

Le Voyage de M. Perrichon : பெரிஷோனுடைய உல்லாசப் பயணம்.

Les deux Timides : இரு சங்கோஜிகள். இவருடைய நாடகங்கள் சில திரைப்படமாகவும் வெளிவந்துள்ளமை குறிப்படத்தக்கது.

லபீஷ் 1880 இல் ஃபிரஞ்சு அகாதெமி உறுப்பினராகத் தேர்ந்–தெடுக்கப்பட்டார். சோகங்கள் சூழ்ந்து எழுத்துலக வானத்தை இருட்டடித்துக் கொண்டிருந்த காலத்தில் மனம் விட்டுச் சிரித்து மகிழ வைக்கும் லபீஷ்"டைய நாடகங்கள் ஒளிமின்னலாகப் பளிச்சிடுகின்றன.



JULES VERNE



LABICHE

MALLARMÉ



17

## குறியீட்டியல் கவிஞர்கள்

### 17.1. பாட்டினிலே வரும் கீதம்: போல் வெர்லேன் Paul Verlaine (1844 - 1896)

1844 இல் பிறந்த வெர்லேன், தம் 18ஆம் வயதில் படித்துப் பட்டம் பெற்றார். ஓவியத்திலும் கவிதையிலும் நாட்டம் இயற்கையாகவே இவருக்கு அமைந்திருந்தது. நகரசபை அலுவலகத்தில் குமாஸ்தாவாக வேலை கிடைத்தது. நிறைய ஓய்வும் கிடைத்தது. இலக்கிய வட்டங்களில் இவர் அறிமுகம் ஆனார்; பல கவிதைகள், இலக்கியத்திறனாய்வுக் கட்டுரைகள் எழுதினார்; தம் இருபத்து மூன்றாவது வயதில் உறவுப்பெண் ஒருத்தியின் மரணத்தால் வந்த துக்கத்தை மறக்கக் குடிக்க ஆரம்பித்தார். வாழ்நாள் முழுவதும் இக்குடிப் பழக்கம் இவரிடம் குடிகொண்டு விட்டது.

இவருடைய முதல் கவிதைத் தொகுப்பு 1866 இல் வெளிவந்தது. "Poèmes Saturniens" என்ற தலைப்பில் சனிகிரகத்தினுடைய பார்வை தன்